## தி.ஐ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்

அரையாண்டுத்தேர்வு - 2017

மதிப்பெண்: 60
நேரம்: 1 ½ மணி

**பகுதி - அ**

**தனித்தாளில் எழுதவும்**

**அ. பின்வரும் பத்தியினைப் படித்து, அதன் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி :-** ( 5x1=5)

"தம்பிக்குக் காய்ச்சல்! இந்த மருந்தைச் சீக்கிரம் வாங்கி வா!" என்று அம்மா, மருந்துச் சீட்டையும், பணத்தையும் தந்தார். நான் அவற்றை வாங்கிக் கொண்டு கடைவீதியை அடைந்தேன்.

அங்கே கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை வெறிச்சோடிய தெரு, அடைத்த கடைகள். வெயிலோ கொளுத்தியது. மின் கம்பிகளில் காக்கைகள் அங்கும் இங்குமாக அமர்ந்திருந்தன.

பூக்கடை ஓரத்துக் குப்பைக்குவியல்களில் கிழிந்த சட்டையுடன், நான்கைந்து சிறுவர்கள் எதையோ தேடிக் கொண்டிருந்தனர். பேருந்து ஒன்றைக்கூடக் காணவில்லை.

பட்டப் பகல் வேளையில் சாலையும், கடைவீதியும் இப்படி இருப்பது அரிது. ஏன் இந்த நிலை? என்ன செய்வேன்? நான் எப்படி மருந்தை வாங்குவேன்?

வினாக்கள்:

1. அம்மா, யாருக்காக மருந்து வாங்கி வரச் சொன்னார்?

அம்மா, தம்பிக்காக மருந்து வாங்கி வரச் சொன்னார்.

2. கடைவீதி எப்படி இருந்தது?

கடைவீதி வெறிச்சோடி இருந்தது.

3. வெயில் எப்படி இருந்தது?

வெயில் கொளுத்தியது.

4. காக்கைகள் எங்கு அமர்ந்திருந்தன?

காக்கைகள் மின்கம்பிகளில் அங்கும் இங்குமாக அமர்ந்திருந்தன.

5. சிறுவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?

சிறுவர்கள் எதையோ தேடிக் கொண்டிருந்தனர்.

**பகுதி - ஆ**

**அ. கட்டுரை வடிவில் விடையளி :-** (5)

1. 'என். எஸ். கிருஷ்ணன்' அவர்களின் இளமைப் பருவம் குறித்து ஒரு கட்டுரை எழுதுக:

( முன்னுரை, பொருளுரை, முடிவுரை கொண்டு மாணவர்கள் எழுதுவர்)

## பகுதி - இ

**அ. தொகைச் சொற்களை விவரி :-** (2x2=4)

1. முக்கனி : மா, பலா, வாழை
2. நாற்றிசை : கிழக்கு,மேற்கு, வடக்கு, தெற்கு

(இரு பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)

**ஆ. பேச்சுவழக்குச் சொற்களை இலக்கிய வழக்கில் எழுதுக:-** (3x1=3)

1. கேளுங்க _ கேளுங்கள்    2. ஆம்பள - ஆண்

3.இருந்துச்சி - இருந்தது

**இ. ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச்சொல்லை எழுதுக.** (3x1=3)

1. PROTEIN _ புரதம்    2.GRINDER – மின் அரைவை
3. WASHING MACHINE - சலவை இயந்திரம்

**ஈ. ஓரெழுத்துச் சொல்லுக்கான பொருளை எழுதுக.** (3x1=3)

1. தா _ கொடு    2.ஐ - தலைவன்    3. ஊ - தசை

**உ. சரியான இணைப்புச் சொல் கொண்டு, தொடரை நிரப்பி, எழுதுக.** (3x1=3)

(ஆகவே, ஆனால், எனவே, அதனால், ஏனெனில் )

1. குயில் இனிமையாகப் பாடும். ___எனவே______ அதனைப்‘பாட்டுப் பறவை’ என்பர்.
2. நாங்கள் இன்று மகிழ்ச்சியாக இருந்தோம். _____ஏனெனில்_____ நாங்கள் களப்பயணம் சென்றோம்.
3. கமலா பொம்மை வாங்கவில்லை. ______ஆனால்______ பம்பரம் வாங்கிக் கொண்டாள்.

## பகுதி - ஈ

**அ. பொருள் தருக :-** (3x1=3)

1. மேதை - அறிவாளி    2. சிறுமை- இழிந்த குணம்

3. ஏடு- புத்தகம்

**ஆ பிரித்து எழுதுக :-** (3x1=3)

1. வைத்திருக்கும் - வைத்து + இருக்கும்    2. பெருந்தேர் - பெருமை + தேர்
3. தீமையென்று - தீமை + என்று

**இ. சேர்த்து எழுதுக :-** (3x1=3)

1. உணவு+திருவிழா - உணவுத் திருவிழா 2. கை + ஆள்வதில் - கையாள்வதில் 3. ஆணுக்கு + இங்கே - ஆணுக்கிங்கே

**ஈ. எதிர்ச்சொல் தருக :-** (3x1=3)

1. பெருமை x சிறுமை 2. புகழ்தல் x இகழ்தல் 3. இளமை x முதுமை

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக :-** (3x1=3)

1. தோல்வியே வெற்றியின் _முதற்படி___________.
2. 'கும்மியடி பெண்ணே' பாடலை எழுதியவர் _பாரதியார்__.
3. ஆவியில் வேகவைக்கப்படும் உணவு வகைகளில் ஒன்று _கொழுக்கட்டை/இட்லி/ பிட்டு / வேக வைத்த சீனிக்கிழங்கு/பனங்கிழங்கு/_மரவள்ளிக் கிழங்கு/ இடியாப்பம் (ஏதேனும் ஒன்று)_

**ஊ. தொடரில் அமைத்து எழுதுக :-** (2x2=4)

1. விழிப்புணர்வு 2.உதவியின்றி

(இதனைத் தொடரில் அமைத்து எழுதுவர்)

**எ. "பணியுமாம்" - எனத் தொடங்கும் குறளினை அடிமாறாமல் எழுதுக :-** (2)

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

**ஏ. கொடுக்கப்பட்டுள்ள 'கும்மியடி பெண்ணே' பாடலை நிறைவு செய்க.** (2)

**1. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று**
**எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்**
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

**ஐ. ஓரிரு வரிகளில் விடையளி :-** **(3x2=6)**

1. கீரைகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

கீரைகளில் இரும்புச் சத்தும், தாது உப்புகளும் மிகுதியாக உள்ளன.

தெளிவான கண்பார்வைக்கு உதவுகின்றன.

இரத்தத்தில் சிவப்பணுக்கள் உருவாக உதவுகின்றன.

2. காடையின் நுண்ணறிவு துணைப்பாடக்கதை மூலம் நீ அறியும் நீதி யாது?

தன் கையே தன் உதவி என்பதே காடையின் நுண்ணறவு கதை மூலம் நான் அறியும் நீதி ஆகும்.

3. அரிய செயலைச் செய்து முடிப்பதற்கு நமக்குத் தேவையானது எது?

அரிய செயலைச் செய்து முடிப்பதற்கு நமக்குத் தேவையானது விடா முயற்சி ஆகும்.

**ஒ. விளக்கமான முறையில் விடையளி :-** **(1x5=5)**

1. 'பெண்கல்வி' என்ற பாடலின் மூலம் பாவேந்தர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக:

கல்வியை விலை போட்டு வாங்க முடியாது.
கல்வி கற்பதற்கு கடினமாக இருக்கும். கற்றிட கற்றிட எளிதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும்.
கல்வி மலைவாழை போல் இனிமையானது.
கல்வி கற்காத பெண்ணின் பெற்றோரை மற்றவர்கள் கேலி செய்வர்.
எனவே ஒரு பெண் கல்வி கற்க வேண்டும்.

Scoring rules:

ஐந்து,நான்கு மதிப்பெண் வினாக்களில் 4 பிழைகளுக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப் படும்.

2 மதிப்பெண் வினாக்களில் 3 பிழைகளுக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்.

1 மதிப்பெண் வினாக்களில் 1 பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்.

பகுதி ஈ ல் இ பகுதி சரியாக இருந்தால் மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்.

பகுதி இ ல் அ, இ பகுதி சரியாக இருந்தால் மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்.

பகுதி ஆ ல் 4 பிழைகளுக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்.

தொடர் பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்.

************